Unfortunately such welcome conventions do not seem to be established in the field of dance, Some of our Sabhas, while encouraging classical music and dance are found also to put up on the same platform spurious and low dance shows. Thereby, they and some of our star dancers unwittingly equate high and low art without feeling the need to distinguish between them. The reason for all these may be found in the deplorable break of discerning patronage during the transition between the times of former royal courts and the present day democracy and in the disrepute and neglect into which the dance art fell for some time 25 years ago. In the result, public memory and knowledge about which is in classical and inferior art seem to have suffered much, if not completely lost.

No country has been so fortunate as India in having inherited from her ancients a rich variety of classical dances and equally bounteous wealth of delectable folk dances, all reflecting the true and high spirtual ideals and traditions of the nation and the noble aspirations of people. These classical dances and especially Bharata Natya are gaining ever mounting esteem and popularity not only in the whole of India but also all over foreign lands both in the East and the West. The phenomenal international esteem for Bharata Natya is due to the fact, that in former times it had been the only highly developed common national dance art of India from Kashmir to Cape Comorin (though best preserved in S. India only in later times) and partly due to its superior intrinsic worth and artistry and

closest conformity to classical traditions in spite of its great antiquity, and centuries of growth.

It is wrong to imagine that Bharata Natya is practised only by S. Indians or popular only in the Southern part of the country. Nowadays as many people in North India are taking to it as in the South. It is the most popular in Ceylon. In Europe and America it is esteemed as the most important dance system of India and many from those parts of the world are found nowadays flocking to India to study and practice it and also to write books about it. Recently a reputed Japanese dance-master was reported to be coming over to Madras to learn Bharata Natya. The Canadian Government is reported to have invited one well known Kathakali dance expert to tour round its country and to popularise that art there. The days of ambitious Indian globe-trotters parading their spurious and hybrid varieties of dance in the name of Indian dances' and 'Oriental dances' seem to be over in foreign countries and connoisseurs in those lands are demanding nowadays genuine Indian classical dances.

When such is the mounting respect and regard for our classical dances all over the world it is rather strange, that some of our own dancers and art lovers in our own country should be blind to the signs of the times and still go in for spurious and cheap art like the so-called 'Oriential Dances'. When closely scrutinised, most of these dances—barring a few honourable exception here and there—are neither 'oriental' nor occidental but accidental, or exotic. They have little or no reference to the technique of any genuine classical dance style of India in rhythm or expression. At best, they are either parodies of some of our classical and folk dances or an incongruous mixture of superficial features of many dance styles including western ones. They are neither drama nor dance proper. They are merely bits of dumb movements with gestures and expressions of drab day-to-day life and hence they are neither fish nor flesh nor good red herring from the point of view of any genuine Indian dance conception. Very often, they are nothing more than shaking the body and limbs in glamorous and ever-changing costumes with a lot of sex appeal.

The usual excuse for some of our dancers and patronising sabhas for indulging in these dances is, that the public wants them and people love both classical and 'Oriental Dances as their own two eyes'. Everybody knows, that of the two, the former is the only real seeing eye andthe latter is an eyesore or false glass eye which serves no purpose except perhaps to keep up appearances. So far as Madras is concerned, it can be said, that it has now large sections of art lovers who are satisfied only with classical art, and it is they who really count and who form responsible public opinion. If there are others also who patronise spurious art, it is not because they love it in preference to classical art, but because they unthinkingly and unquestioningly take in what is offered to them by way of cheap entertainment to whileaway their time. The mass mind is mostly what it is shaped into by those who are in the limelight. As in politics so in art also, it can be moulded to any shape for high or low purposes. The man of real culture lives in the light but not in the limelight always. He would not stoop to effuse the false glamour with which a man of low culture enchants the unthinking sections of the populace.

One who wants to satisfy his hunger outside his home, is ordinarly expected to go to a clean hotel and take wholesome food. But if some people are found to resort to any insanitary hotel and take rotten stuff also, it is not because they like or love it but because they take in unthinkingly what is easily offered and available to them at cheap cost. Like food, art also has become a necessity of life for people and like the hotel keeper, the artiste also has a responsibility to keep and vend out only clean fare. He cannot plead the excuse

that people want only unclean stuff and hence he offers it. If he does so, he simply profits by exploiting the gullible public. Any great sculptor worth the name and true to his ideal as an artiste, may carve out a figure of Nataraja of Cosmic dance and for a variety he may also shape out figures of other gods and goddesses, saints and great men or even a peasant honestly toiling for the benefit of others. He would never waste his time and talents in producing figures of doubtful worth or indecency.

So in matters of art, it is the artiste who has the responsibility of keeping up high and true standards and shaping and elevating the tastes of the masses, instead of himself first lowering them down and pandering to the vitiated tastes in a vicious circle. Any true artiste may expound the available classical dance styles of India as they are, or create new forms of art based on the best features of traditional technique and reflecting the national genius. If instead of that healthy attitude, he goes in for inferior exotic art, it will be nothing short of treason to the true ideal of all great art, disloyalty to his own country, inferiority complex about his own country's art treasures and an insult to the memory of our great sages from whom we have inherited the richest legacy in dance art. Some artistes have even begun to condemn the much admired and highly suggestive mudras of Bharata Natya as ununderstandable to the masses and want to expound it with other ordinary gestures. Some others have gone to the extent of equating the spurious dances with classical ones as the two eyes of the people. Verily, our great sages like Nandikeswara, Bharata and Ilango would turn in their graves and look askance at the gratitude and superior wisdom of their own progeny of the 20th century!

Some dealers in oriental dances profess, that instead of being confined to Bharata Natya only, they are catholic enough in their outlook to give other variation also like Kathakali, Kathak and Manipuri dances. If one and the same artiste can present all these in their genuine forms and do justice to every one of them, he is welcome to do so and all honour to him. But a jack of all trades is master of none and such a habit has in practice led to either an incongruous mixture of styles or exposition of superficial art in each style. Apart from that, if one really handles all these varieties in their genuine forms, one can straightaway call them 'Indian Classical Dances.' Why advertise them as 'Oriental Dances'? The truth of the matter is that the so-called 'Oriental Dances' are nondescript and cannot stand the test of true aesthetics in dance art.

Complaints are often heard, that in some of the present day marriage party entertainments, also, oriental dances are preferred to classical art. Let it not be forgotten, that in former times Bharata Natya alone formed an important part of such celebrations as *Gandharva Prithi.* No Gandharva will be pleased with other spurious art. Even in marriage party music concerts, in urban areas wherein amidst the rush of incoming and outgoing guests, few listen to the music with continued interest ; no musician is found to change the established convention or fill his concert with light songs. Why the present day degradation ?

One can understand such of those as have no faith in or capacity for handling classical art indulging in spurious art. But it is a misfortune and nothing short of tragedy, if even some of our reputed dancers capable of expounding good classical art and drawing large and respectable audiences go in for inferior art also in the mistaken notion that people want it. One cannot please both God and Satan. One who professes to belong to the bhakthi cult of Sri Chaitanya cannot at the same time be a member of a party intent on breaking idols and burning sacred books. The choice has to be made wisely once for all. All over the world, it is only such of those as had resisted the temptations of Satan and

stuck to God that had made history, served humanity best and left a lasting memory of their names and services. In the possibility of achieving the first best, it is treason to go in even for the second best. An ounce of approval and good esteem from knowing connoisseurs is of greater worth than tons of cheap applause from the unthinking gallery of ill-defined knowledge and vitiated tastes. Even today it is only such of those few dancers still sticking to classical art that command respect though they are not found frequently on the stage.

It may be that even a highly accomplished artiste in classical dance finds himself forced by certain circumstances and surroundings to lapse occasionally into inferior art. It is wise not to speak about it. It is folly if that is sought to be justified and proclaimed as a virtue through unconvincing and slaphappy arguments. Any way, in the interests of our national self respect and proper development of our great heritage in the dance art, out star artistes and patronising public institutions may feel their responsibility as leaders of public tastes and opinion and encourage only genuine art and eschew all spurious art on their concert platforms.

என்ன சுகம்

கீர்த்தனை

(பெ. தூரன்)

ராகம் : வஸந்தா

தாளம் : சதுச்ரஜாதி மட்டியம்

(17-வது மேளகர்த்தா ஜன்யம்)

ஆரோகணம் : ஸமகமதநிஸ. அவரோகணம் : ஸநிதமகரிஸ (ஒரு களைச் சவுக்கம்)

பல்லவி

என்ன சுகம் கண்டாய் மனமே—நீ
ஈசனை நினையாமல் காசினிமேல் வாழ்ந்து (என்)

அநுபல்லவி

பொன்னைப் பொருளைக் கொண்டு போகமெல்லாம் பெறவே
எண்ணி எங்கும் திரிந்து ஏமாந்த தன்றி வேறு (என்)

சரணம்

ஐம்புலன் வழிசென்றால் அதுவே ஆனந்தமென்று
அறியாமையால் நினைந்து அலைந்தது போதாதோ
மெய்மறை நாதனை மேன்மை இன்பந்தரும்
தெய்வத்தைப் போற்றாமல் தினத்தைக் கழித்து நீ (என்)

ARTS ACADEMY (Regd.), MADRAS-7

Sunday 4-12-55 at 6 p. m.

AT ANNAMALAI MANRAM, MADRAS-1

Seva Stage Presents

BOMBAY MAIL

Drama in Tamil

மைனவதி

ஞாயிறு 4-12-55 மாலை 6 மணிக்கு

சென்னை, அண்ணுமலை மன்றத்தில்

ஸேவா ஸ்டேஜ் சர்விஸ் அளிக்கும்

பம்பாய் மெயில்

(தமிழ் நாடகம்)

S. V. Sahasranamam
S. V. Subbiah
A. Ratnamala
M. Mynavathi
Sivaji Ganesan
S. A. Kannan
K. N. Kamala
C. Prameela

and others

பம்பாய் மெயில்

(கதைச் சுருக்கம்)

சுந்தரம் துப்பறியும் நிபுணர். அவரும், சதாசிவ முதலியார் பெண் பார்வதியும், மெய்க்காதலர்கள். தனிகாசல முதலியார் என்னும் செல்வந்தரிடம் ஒரு பணப்புதையலுள்ள ஓர் படம் வைத்திருக்கிறார். ஆனால் அதை வைத்துக்கொண்டு பொருள் அறிந்து புதையலை அடைய அவரால் முடியவில்லை. சுந்தரம் உதவி செய்ய முன் வந்தும், அவனிடம் அதைக் காட்ட அவர் விரும்பவில்லை.

பம்பாய் மெயில் என்னும் கொள்ளைக்காரனிடம் முதலியாருக்கு மிகுந்த பயம். பார்வதியிடம் அவள் தாய்மாமன் மாசிலாமணி காதல் கொள்கிறான், சுந்தரத்திடம் அவனுக்கு ஆத்திரம் ஏற்படுகிறது. மாசிலாமணி மரகதம என்னும் வேசியிடம் நட்புடையவன் அவள் உதவியுடன், தன் வேலையாள் முனியனை அனுப்பி தணிகாசல முதலியாரிடமுள்ள படத்தை அபகரிக்கத் திட்டமிடுகிறான்.

தணிகாசல முதலியாரின் மகள் நாகரத்தினம் சுந்தரத்தின் தம்பி கோபாலனை காதலிக்கிறாள். கோபாலன் தன்னுடைய சூழ்ச்சிக்கு இடைஞ்சலாய் இருக்கிறான் என்பதையறிந்து அவன்மீது முதலியாருக்கு வெறுப்புண்டாகும்படி மாசிலாமணி செய்துவிடுகிறான். "பம்பாய் மெயிலும்" தணிகாசல முதலியாரிடம் உள்ள படத்தை அபகரிக்க ஏற்பாடு செய்கிறான்.

திடீரென்று ஒரு இரவு சதாசிவ முதலியார் வீட்டில் இல்லாத சமயம் பார்த்து, பார்வதியை பம்பாய் மெயில் தூக்கிக்கொண்டு ஓடிவிடுகிறான். ரூ. 50,000 தந்தால் பெண்ணை விடுவிப்பதாக அறிவிக்கிறான். பம்பாய் மெயிலை பிடித்து விட இது நல்ல சந்தர்ப்பம் என்று போலீஸ் இன்ஸ்பெக்டர் ராமசாமி நாயுடு, சம்மதத்தைத் தெரிவிக்கும்படி முதலியாருக்கு உபதேசிக்கிறார். இந்த விபரங்களையெல்லாம் துப்பறியும் சுந்தரத்திடம் சொல்லி முறையிடுகிறார் சுந்தரம் உதவி செய்வதாய் வாக்களிக்கிறான்.



சிவாஜி கணேசன்

நாகரத்தினம் தன் தந்தையைப்போல் கோபாலனை வெறுக்கிறாள். கோபாலன் மனமுடைந்து வேலையை ராஜினாமா செய்ய, சுந்தரம் அவனை தேற்றுகிறான்.

பம்பாய் மெயில் குறித்த தினத்தில், மாறுவேடம் பூண்டு, பார்வதியை கொண்டு விடுகிறான். சதாசிவ முதலியார் போலீஸ் இன்ஸ்பெக்டரின் உபதேசத்தால் பணம் கொடுக்கவில்லை, கொடுக்கத் தவறினால் திரும்ப பெண்ணைக் கொண்டுபோய் விடுவேன் என்று பம்பாய் மெயிலின் பயமுறுத்தலினால் போலீஸ் பந்தோபஸ்து வீட்டைச் சுற்றி வைக்கப்படுகிறது.

கோபாலனுக்கும், மாசிலாமணிக்கும் தகராறு வலுக்கிறது. சமயத்தில் பம்பாய் மெயில் வருகிறான். மாசிலாமணியிடம், கோபாலனை நாகரத்தினம் வெறுக்கும்படி செய்தது தான் தான் என்று எழுதி கோபாலனிடம் கொடுக்கிறான்.

பம்பாய் மெயில் யாரும் அறியாமல் பார்வதியை தூக்கிப் போய் விடுகிறான். முதலி

சகஸ்ரநாமம்

யார் துடிக்கிறார். ஆனாலும் பணம் கொடுக்க விரும்ப வில்லை. இந்த சந்தர்ப்பத்தில் புதிய துப்பறிபவர் காசில்லாமல் உதவுவதாயும் தன்னை சந்திக்கும்படி எழுதவே, முதலியார் அவர் தந்த விலாசத்துக்குப் போகிறார்.

போலி துப்பறிபவராக எழுதிய பம்பாய் மெயிலின் வலையில் முதலியார் சிக்குகிறார் ரூ. 50000 பணத்தையும் கொடுக்கிறார்.

திடீரென்று முனியன் சமயம் பார்த்து தணிகாசல முதலியாரைக் கொன்றுவிட்டு படத்தை எடுத்துக்கொண்டு ஓட முயற்சிக்க பம்பாய் மெயில் குறுக்கிட்டுப் படத்தைப் பிடுங்கிக்கொள்கிறான். முனியன் கொலை செய்ததும், பம்பாய் மெயில்போல் ஒரு லெட்டர் எழுதி போட்டு விடுகிறான். ஆனால் கோபாலனையே எல்லாரும் சந்தேகிக்கிறார்கள்.

படம் பறிபோனதால் மாசிலாமணி குரோதம் கொண்டு பம்பாய் மெயிலை ஒழிக்க திட்டமிட்டு, மரகதத்தின் மூலம் சாதிக்க எண்ணுகிறான். பார்வதியை வஞ்சனையால் இழுத்துச்சென்று, பம்பாய் மெயில் சமயத்தில் தோன்றி அவளைக் காப்பாற்றுகிறான். தனிகாசல முதலியாரை முனியன் கொலை செய்தபோது, அதை பம்பாய் மெயில் எடுத்த போட்டோவைப் பார்த்ததும் நாகரத்தினம் மனம் மாறி கோபாலனிடம் மன்னிப்பு கேட்கிறாள்.

இன்ஸ்பெக்டர் ராமசாமி நாயுடுவின் வேண்டுகோளுக்கு இணங்கி பம்பாய் மெயிலைப் பிடித்துத் தருவதாக துப்பறியும் சுந்தரம் வாக்களிக்கிறான்.

மாசிலாமணியின் சூழ்ச்சியால் கோபாலனும் சுந்தரமும் கிணற்றில் தள்ளப்படுகிறார்கள்.

கோபாலனும் சுந்தரமும் என்ன ஆனார்கள்?

பம்பாய் மெயில் பிடிபட்டானா?

மற்றும் பிற நிகழ்ச்சிகளை மேடையில் காணுங்கள்.

ஸேவாஸ் ஸ்டேஜ் ஸர்வீஸ்.



Accurate, neat and prompt Service guaranteed

Minor repairs undertaken free of charge

INDIAN OPTICAL COMPANY

OPTICIANS

Kesari Kuteeram Buildings,

15 WEST COTT ROAD,

RAYAPETTAH : : MADRAS - 14

தியாக ப்ரம்மம்

சங்கீத கலாநிதி மஹாராஜபுரம் விஸ்வநாத அய்யர்

உலகிலுள்ள எல்லா நாடுகளும் சங்கீதத்தைப் போற்றுகின்றன. இசைப்புலவர்களிடையே யாருக்கும் பகையில்லை. எல்லோரும் அவர்களை போற்றுகிறார்கள். சாதி மதம் மொழி நாடுஎன்றதை கடந்து ஓரே அகண்டாகாரமாக அன்னை பராசக்தியான ஸ்ரீதேவி விளங்குகிறாள் ஸங்கீதவாணியின் பூரண அருள் பெற்ற நாடு நம் தமிழ்நாடு. இங்கேதான் இசை கலை மிக உச்சநிலை அடைந்து கர்நாடக ஸங்கீர்த்தனமாக அவதரித்துவிளங்குகிறது.

அவற்றுள் முதன்மையானவை ஸ்ரீ த்யாகராஜ கீர்த்தனங்களும், ஸ்ரீ முத்துஸாமி தீக்ஷதர் க்ருதிளும், ஸ்ரீ சாமாஸாஸ்திரிகள் கிருதிகளுமாகும் இவை எல்லாம் தெலுங்கிலும், ஸமஸ்கிருதத்திலும் உள்ளன. எனினும் இவைநாதமயமான அந்தராத்மாவை தொட்டு கானசுக மளிப்பதால் இவை எல்லா உலகத்திற்கும் பொதுவான இசை செல்வங்களாகும். மேலே சொன்னமூவரும் ஸங்கீத திருமூர்த்திகளாகும், இவர்கள் ஸ்ருஷ்டித்த நாத கலைதான் இன்று கர்நாடக ஸங்கீத வெள்ளமாக நம் தமிழ் நாட்டில் பெருகி வருகிறது. இவர்களுள் ஸ்ரீ த்யாகப்ரும்மம் பரம பக்திமான். அதுவும் ஸ்ரீராம பிரானிடம் அளவுகடந்தபக்தி. இராமபக்தர், இவருடைய சங்கீர்த்தனங்கள் பக்தி பரவசத்தால் உருகி, உருகி, பாடி நம்மை பேரானந்தத்தில் மூழ்க செய்கிறது. இவருடைய ஜீவனமெல்லாம் ஒரே நாதோபாஸனையே. இந்த மகாத்வின் வாழ்வே சங்கீர்த்தனம்; சங்கீர்த்தனமே வாழ்வு.

காவேரிகரையில் உள்ள பல அழகான க்ஷேத்ரங்களுள் திருவாரூர் மிகவும் புகழ் பெற்ற சிவஸ்தலம். இந்த ஊரில் எத்தனையோ பெரிய வித்வானகள் இருந்தனர். அவர்களுள் ப்ரும்ம குலத்தில் கிரிராஜப்ரும்மம் என்று ஒருவர் இருந்தார் அவர் தெலுங்கிலும், ஸமஸ்கிருதத்திலும் நல்லபாண்டிய முடையவர். இவரே நமது த்யாக ப்ரும்மத்தின் பாட்டனார். கிரி ராஜ ப்ரும்மத்திற்கு ஐந்து குமார்களுண்டு. அவர்களுள் கடைசிமகனை ஸ்ரீராமப்ரும்மமே நமது த்யாகப்ரும்மத்தின் தந்தையார்.

இராம ப்ரும்மம் தமதுமனைவியுடன் இல்லறங்காத்து பரம பாகவதராக விளங்கினார். அவரது மனைவியார் மிகுந்த ஒழுக்கமும், கற்பும் பொறுமையும், நல்ல சங்கீதப்பயிற்சியும், ஜபசாதனமும் கொண்ட உத்தமி.

தந்தை இராம ப்ரும்மம் சிவவிஷ்ணு பக்தியில் ஈடுபட்டு, நித்மயாத்சவ திவ்யராம பஜனையும், திவ்யகாசாலட் சேபமும் செய்து வாழ்ந்து வந்த சமயத் திருவாரூர் த்யாகேசரின் அநுக்ரகத்தால் இவருக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன. அதில் மூத்தவன் ஜல்பேசன். இரண்டாவது இராமநாதன். மூன்றுவது த்யாகராஜன். இவர் ஸர்வஜித் வருஷம் சித்திரை மாதம் பூசம் நட்க்ஷத்திரத்தில் பிறந்தார்.

பெற்றோர் தாம் வழிபட்ட த்யாகேசரின் பெயரையே கடைசிபிள்ளைக்கு சூட்டினர். மூத்தவன் மூர்கன, ஒழுக்க மற்றவன். பொருமைதீபன், முன்கோபி. சகல துற்குணங்களுகுடி கொண்டவன்.

இராமப்ரும்மம் திருவையாறு சென்ற சமயத்தில், அந்த ஊர் பிடித்திருந்தது. குடும்பத்துடன் திருவையாற்றில் ஒருசிறு வீட்டிற்குடி புகுந்தார் எட்டாம் வயதில் உபநயனம் நடந்தது. அன்று முதல் தந்தையின் இராம விக்ரகத்திற்குத் த்யாகராஜரே பூஜை செய்துவந்தார். ஸ்ரீ ராம கிருஷ்ணந்த என்ற மஹாயோகி ஒருவர் ஸ்ரீ த்யாகராஜருக்கு ஸ்ரீ இராம ஷடாட்சரி மந்திரத்தை உபதேசித்தார். அன்று முதல் த்யாகபிரம்மம் கணக்கற்ற இராமஜபம் செய்து வந்தார். சிறுவயதில் த்யாகராஜருக்கு அவருடைய தாயார், 'புரந்தரதாஸ் இராம தாஸ கீர்தனங்களும் அஷ்டபதியும் சொல்லிவைத்தார். இராமாயணத்தில் அவருக்கு மிகுந்த பிரியத்துடன் வாசித்துவந்தார். இராம விக்ரகத்தை மிகுந்த பக்தியுடன் பூஜைசெய்து திவ்ய கானம் செய்துவந்தார்.

இப்படி வாழ்ந்துவரும் காலத்தில் தஞ்சையரசில் பலவித்வான்கள் இருந்தனர். அவர்களுக்குள் முதன்மையானவர் ஸொன்டி வெங்கடஸுப்பையா. அவருடைய புதல்வர் ஸொன்டி வெங்கட்ரமணையா என்பவரே நமது த்யாக ராஜரின் குரு. அவரிடம் ஸங்கீதம் அப்யாசம் செய்துவந்தார் த்யாகராஜரின் வரப்பிரஸாதமான இயலிசைத் திறமையையும், அகண்டமான மனோ தர்மத்தையும் தாம் அறிந்து அதை பாடவும் கேட்டு அனுபவிக்க வேண்டுமென்று விரும்பியதினால், ஒரு நாள்

த்யாகராஜரைப் பாடச் செய்தார். சகலரும் வியந்தனர்.

இப்படி இருந்துவரும் நாளில் த்யாகராஜருக்கு அவருடைய குரு ஸ்ரீ கிருஷ்ணாநந்தரால் ஸ்ரீ நாரதமந்திரம், உபதேசிக்கப்பட்டு அதை பக்திசிரத்தையுடன் ஜபித்துவந்த ஸ்ரீ த்யாகராஜருக்கு ஸ்ரீ நாரதர் தோன்றி "ஸ்வரார்ணவம்" என்ற அரிய ஸ்வர ரகசிய நூலை கொடுத்து மறைந்தார். அந்த நூல் சமய ஸஞ்சீவியாக உதவியது.

ஸ்ரீ த்யாகராஜர் தினந்தோறும் லக்ஷத்திற்கு மேற்பட்டு இராமஜபம் செய்து அவருடைய 38 வயதுக்குள் 96 கோடி இராமஜபம் உருவேற்றினார். கடைசி தினம் உள்ள முருகி ஸ்ரீ ராமனைப் பாடும் போது, கதவு தட்டிய சப்தம் கேட்டு ஓடி திறந்து பார்த்தார். ஸ்ரீ ராமலக்ஷ்மணன் இருவரையும் கண்டார். உள்ளம் சிலிர்த்தார், ஆனந்த பரவசமானார். பரம பக்தியால் உடல் சிலிர்க்க கண்ணீர் பெருக, ஏல நீ தயராது" என்ற அடாணா ராக கீர்த்தனத்தை மொழிந்தார்.

தந்தை முறைப்படி மூவருக்கும் திருமணம் செய்து வைத்தார். ஆனால் ஸ்ரீ த்யாக ப்ரும்மம் 'இராம பக்தியில் ஈடுபட்டு' இராம பைத்தியமாக இருந்து வந்தார். தனது எளிய சிறிய மனையில் அலங்காரமான மேடையமைத்து அலங்கரித்து ஸ்ரீ ராமனை கொலுவிருத்தி, வாழ் வெல்லாம் அவனுக்கே அர்ப்பணித்தார் பரம பக்தர். "கொலுவமரே கதா கோதண்ட பாணி" என்ற தோடி ராக கீர்த்தனமும், கொலுவையுன்னாடே, உபசாரமுலனு சேகோனவையா" என்னும் கீர்த்தனங்கள் த்யாகராஜரின் சகுணோபாசங்களை விளக்கும். பள்ளியெழுச்சி, அபிஷேகம், அலங்காரம், நிவேதனம், சிரமபரிகாரம் செய்தல், இரவில் திருபள்ளிசேர்த்தல், தாலாட்டல், பல வகையான இராஜோபசாரங்களைச்செய்தல் முதலிய சகல வழிபாடுகளையும் கீர்த்தனை ரூபமாக செய்துவந்தார்.

இப்படியாக பல விதமாகவும், பலசந்தர்ப்பங்களிலும் பல பலகீர்த்தனைகளை ஸ்ரீத்யாகராஜர் செய்துவந்தார். ஸ்ரீத்யாகப்ரும்மத்தின் பக்திமகிமையும், கானமகிமையும் நாடேங்கும் பரவியது. தமது சிஷ்யர்களுக்கு அவ்வப்பொழுது கீர்த்தனங்களைபாடி, அவர்களையும், இராம பக்தியில் ஈடுபடச்செய்வார். ஸ்ரீத்யாகப்ரும்மம் இராமபக்தியில் சித்திபெற்று, மற்றெல்லாத் தெய்வங்களிடத்திலும் சமபக்தியுடன் அநேக கீர்த்தனைகள் செய்துயிருக்கிறார். தெய்வரசத்தில் சமரசம் கண்டார். வாழ்க்கையில் நிகழ்ந்த சம்மவங்களுக்கேற்றபாடல்களும் பல உண்டு.

ஸ்ரீ ராம பக்தியே பிரதான மென்று தஞ்சை அரசனால் தனக்கு கொடுக்கப்பட்ட பொருளையும் பொன்னையும் நிராகரித்தார். இறுதி நாட்களை ஜபதபங்களிலேயே கழித்தார். மனைவி காலஞ் சென்ற பிறகு ஸ்ரீத்யாகப்ரும்மம் துறவியானார். பக்தி பரவசமாக பஜனை செய்து தம்மை மறந்து பாடினார். ஸ்ரீ ராமன் என்னை அழைக்கிறான். அதோடு தானும் ஆபத்ஸன்நியாசம் வாங்கிக்கொண்டு, சிஷ்யர்கள் திரளாக இராம பஜனைசெய்ய, 'ஸ்ரீராம ஜயராம்' என்று பக்தர்கள் கோஷிக்க பராபவ வருஷம், பகுளபஞ்சமி சுபதினம், திடீரென ஸ்வாமிகளின் கபாலம்வெடித்து அதிலிருந்து ஒருஜோதி கிளம்பியது, உடல் விழுந்தது. த்யாகராஜர் என்னும் நாமத்துடன் வாழ்ந்த நரரூபம் மறைந்து நாத ஜோதியாக ஸ்ரீராமனிடம் சேர்ந்தது. அதுவே த்யாகப்ரும்மம்.

For **ANYTHING IN RAILWAY ADVERTISEMENT**

Please contact

M/s. SAN PUBLICITY INFORMATION BUREAU

KILPAUK : MADRAS-10

శ్రీ త్యాగరాజప్రశంస

SANGEETHA KALANIDHI, DOCTOR DWARAM VENKATASWAMY NAIDU

త్యాగరాజుకవి, పండితుడు, పరమభక్తుడు—అన్నిటికంటెను గాయకబ్రహ్మ వాగ్గేయకారక శిఖామణి. తనరచనలనే గాగ తన్నుగూడ దైవ నామసంకీర్తనమునకే అంకితముగావించుకొన్న మహానుభావుడు. అతని జీవితముతోపాటు తన రచనలును క్రమపరిణామము చెందినవి. పోను పోను యాతని రచనలు మిక్కిలి రసభరితములై భావగాంభీర్యముతో నిండినవి.

త్యాగరాజుని రచనలు సర్వతోముఖ సుందరములు. వాటి భాషయందలి పదములుగానీ, సంగీతములోని సంగతులుగానీ కదపరానివి. ఆయాస్థలములనుండి ఆయా పదములుగానీ సంగతులుగానీ రసపుష్టికి దెబ్బతగలకుండా మార్చుట సాధ్యముగాని పని. అందలి స్వరపోకడలు సరసములు, సందర్భసహితములు అయ్యావి సక్రమపరిణామకల్గినవి. సాహిత్యమో? మహా ప్రవాహము! సారఘుసారసారణి! సంగీతమునందాయనచేసిన సాహిత్యపు పోదపు అద్వితీయము తలంచుకొలది, విన్నకొలది, విచిత్రమై మహాశ్చర్య సంజనితమై, అనిర్వచనీయమైన ఆనంద సుధా తరంగముల మైమరపించి, మనలనోలలాడించు మహత్తరశక్తిగలవి ఆయనరచనలు.

త్యాగరాజు పండితుడు చిన్ననాటనే వేదాధ్యయమును, సంగీతమును నేర్చుకొని, కావ్య నాటకాలంకార వ్యుత్పత్తినిపొందెను. అతడేక సంతగ్రాహి పండితుడుమాత్రమేకాదు ఐహిక సుఖముల తూలనాడి పారమార్థికచింతనమే కలిగి గనుండిన భక్తాగ్రేసరుడు.

తాను రచించిన కీర్తనములన్నియు, భక్తిరస ప్రధానములు. 'సరగున పాదములకు స్వాంతమను సరోజమను సమర్పణ'చేసి, 'పతిత పావనుడనే పరాత్పరునిగురించి పరమార్థమగు నిజమార్గముతోను పాడుచును సల్లాపముతో స్వరలయాదిరాగముల' తెలిసిన త్యాగరాజు సదా పరమేశ్వరుని — ఆ 'హొయలుమీర నడలుకల్గు సరసుని, సదాకనులజూచుచును పులకిత శరీరుడై ఆనందపయోధినిమగ్ను'డైనవాడు.

త్యాగరాజ విరచిత సాహిత్యమునందు, మహాకవుల భావములు, ప్రయోగములు, పోకడలు కనబడుతవి. అందుచక్కని, తిన్ననిసూక్తులు, అందమైనయుపమలు, శ్లేషలు ఇత్యాది అలంకారములు, తెలుగు నుడికారమునకు వన్నెపెట్టు వ్యావహారిక పదప్రయోగములును కానవచ్చును.

త్యాగరాజుని రచనయందు మిక్కిలి ప్రాముఖ్యతకలది కీర్తన, కీర్తనారచనము ఇతఃపూర్వమే యున్నప్పటికిని, యనేకవిధముల యాతనిచేతనే అయ్యది పరిపూర్ణతపొందినది. త్యాగరాజు కీర్తనలన్నియు, నిర్మాణస్వరూపమునుబట్టి యొక విధముననే యున్నను, వాటినడకను, రచనాస్వభావములనుబట్టి అందు కొన్ని వర్ణములుగను, పదములుగను, జావళీలుగను, మరికొన్ని బిగువైన పల్లవులవలెను కన్పట్టును. ఇట్టిరచనాశక్తి యపురూపమైనది. ప్రతిరచనమును రాగభావముతో నిండియుండును.

త్యాగరాజుని సంగీతరచనా మాధుర్యము కేవల మనుభవైకనేద్యము. ఆయన సంగీతరచనలలో రసపుష్టిలేనిది లేదు. సాహిత్యభావము, సాహిత్యముకన్న నెక్కువగా సంగీతమే ప్రకటించు

చూ, రసవిస్ఫూర్తికలుగజేసి, ఆరసప్రభావము చేత రచనలోని భాష తెలియని వానికి సహితము యందలి భావమును తెలియజేయు మహాశక్తి ఆయన సంగీతరచనలయందు నిస్సందేహము కలదు. 'సంగీతము విశ్వజనీనభాష' అనునానుడికి త్యాగరాజుని రచనలు యొప్పు యుదాహరణములు. ఆతడు నాదస్వరూపమును, తత్వమును పూర్తిగనవగాహన చేసుకొని, వివిధరీతుల, గతుల, విన్యాసపునడల, ఒయ్యారపు వరుసల చేర్చికూర్చెను. ఒకమాటలో చెప్పవలెనన్న త్యాగరాజుని రచనలు నాదామృత రసగుళికలు.

'లయ' విషయమున గూడ త్యాగరాజుని దృక్పథము సర్వజన విదితము, సుస్పష్టము. గాయకుని మనస్సు నాదోపాసననుండి చెదర్ప రాదు, అందువలన క్లిష్టమగు తాళముల నుపయోగించరాదు, భావరాగలయాదుల ప్రాముఖ్యత క్రమముగ పరిగణింపవలయునన్న భావము కలవాడు.

సంఘ సంస్కరణ, దైవచింతనమునందు వేర్వేరు మతముల వివాదపరిష్కార సూచనము, వెతకల్గిన తాళుకొమ్మను ఓదార్పు దైవోత్సాహ విముఖులతో చేరబోకుమను సలహా ఇటులనే యెన్నియోవిధముల మానవాళికి త్యాగరాజుని సందేశము సర్వతోముఖమైనది.

సర్వతోముఖమైన శక్తివల్లనే త్యాగరాజుని రచనలు భాషాకృత పరిమితత్వమును జయించినవి భాషావిదుడయ్యు భాషను అధిగమించి రచించిన త్యాగరాజు మిక్కిలి ప్రతిభావంతుడు, అసాధారణప్రజ్ఞ ఉపజ్ఞ కలవాడు. విశ్వజనీనమైన విశాల దృష్టి, సృష్టిరహస్యమెరుగజాలిన మేధశ్శక్తి, నిర్మలమైన విశాలహృదయము, శతాబ్దముల ముందుకు చూడగల దూరదృష్టి, వివిధసంగీత రీతులలోని యుత్కృష్టతను అవగాహనచేసుకొని, వానిరసమును పిండి ఈయగల సూక్ష్మజ్ఞానమును గల్గి, అమితానందదాయకములైన తన రచనల రూపమున, యావద్భారతదేశ ప్రజలకుమాత్రమే గాక, విశ్వమానవకోటికెల్లను భక్తి, శాంతి, సౌఖ్యమను సందేశమిచ్చిన మహాపురుషుడు. ఆతని ప్రతిభ భారతీయ విజ్ఞానమునకే యొక అపూర్వ నిదర్శనము.

K. P. M. ABDULLA & BROS.

Stockists in :

Genuine, Guaranteed, Military Disposal Parts

For

FORD, CHEVROLET, DODGE, Etc.

Branch :
No. 5, Harris Road,
MADRAS-2.

Head Office :
No. 20, Harris Road,
MADRAS-2.

MUSIC – FOR A PRICE

By K. SRINIVASAN, B.A., B.L.

Some year ago I attended a public meeting where a second marriage for our women was advocated. A foreign lady in addressing the gathering stated that our women were prone to be averse to a second marriage because it was prohibited by our Sastras. But she justified defying the Sastras by quoting the analogy of Food which though was prohibited from being sold was yet taken as a profession by many and actually encouraged by our women. The Second wrong justified the First. That was the argument advanced by her, applauded by the audience and published through the press.

On the same analogy, can music be sold ? The person who had no musical taste was said to ask "how is music sold—in measures or visses ?" But the days are gone when music was the inspired outbursts of great people. Saint Thyagaraja or Muthuswami Dhikshithar could have become millionaires if only they did not make the mistake of having been born over a century ago. They could have made music for our pictures or sung to audiences musically minded and stipulated a price for each performance.

But here again several factors are at work. The audience consists of three classes—(1) those who are satisfied with mere sweetness of voice or rhythmic effects (2) those who are devotional and care for technicalities and (3) the middle class man who can tolerate scientific music only for a little while and then would whistle for light music. One does not know whether Saint Thyagaraja could sing as well as he could compose. Those in living memory cannot by themselves entertain an audience whereas their compositions (full of meaning) could be rendered successful and catch the ears of the masses when handled by artistes.

When all is said and done, music is divine. The music of the spheres is proverbial and so also that of the Gandharvas. The composer must be above the ordinary—must be inspired. It must be the spontaneous outburst of a divine gifted individual. It cannot be sung at the dictation of another.

But days are changing. The Divinity is sought to be taken out of it. It has to be sung when others want it and the best renderer of composed songs quotes the highest price of it. A music performance is an opportunity to make a living for the songster, it is an entertainment (or infliction ?) for the listner and an ordeal for the organiser. May God help all of them !

Grams : "MOTORSPARE"

M. P. NARAYANAN

Stockist

ARMY DISPOSAL RADIATORS & CHASSIS PARTS

OF ALL TRUCKS

82, HARRIS ROAD

MADRAS-2

ARTS ACADEMY (Regd.), MADRAS-7

Saturday 10-12-55 at 6 p.m.

AT ANNAMALAI MANRAM, MADRAS-1

Grand Flute Concert by

Venugana Vidwan **Sri T. R. MAHALINGAM & Party**

நாடகக் கலை [மா - ரா]

"நாடகமே உலகம்" என்று நாட்டிலுள்ளோர் சொல்கின்றனர். அதாவது இயற்கையால் அமைக்கப்பட்ட மேடையாகிய உலகில் ஒவ்வொரு உயிரும் தனக்குக் கொடுக்கப்பட்ட நாடக பாத்திரத்தை (பிறவியை) திறம்பட நாடக முறை (நீதிமுறை) வழுவாது நடிக்கின்றனரா என்று அதைப் பார்வையிட்டும் பயிற்சியளித்தும் பேணுவது "பெரும்பொருளே" என்றும் விளக்கம் கூறுவர். எது எப்படி இருப்பினும் நாடகத்திற்கு உலகம் ஒரு நல்ல உவமை—உள்ளக் குறிப்பினை தம் உடம்பிற் தோணும் மெய்ப்பாடுகளால் புலப்படுத்துவதே நாடகத்தின் தன்மை. உள்ளத்தின் விருப்பப்படியே ஒவ்வொரு மனிதனும் செயலாற்றுகிறான். அதாவது உள்ளக் குறிப்பினை தன் முயற்சிகளால் வெளிப்படுத்துகிறான். இப்படி உள்ளத்தை வெளிப்படுத்தும் ஆற்றலை ஒன்பது வகையாகப் பிரித்துள்ளனர் முன்னோர்:— அவ்வுணர்ச்சிகள் செவியாலும்கண்ணாலும் நுகரப்படும்—அவை, நகை—அவலம்—இழிப்பு—வியப்பு—அச்சம்—வீரம் வெகுளி—உவகை—சமநிலை என்பன. இவ்வுணர்ச்சிகளை திறம்பட வெளிப்படுத்தும் ஆற்றலுள்ளவனே நடிகன்—இவ்வுணர்வுகளால் உள்ளதும் இல்லதுமாகிய ஏதாவது ஒரு கதையினை நடித்துக் காட்டுவதே நாடகம்!!

இத்தகைய 'நாடகங்கள்' அருங்கலைகளுள் ஒன்றாக அக்காலந்தொட்டே போற்றப்பட்டுள்ளன! நாடகத்திற்கென்றே தனித்தமிழ் இயங்கியது—நடிப்பிற்கேற்ற வசனமே பாட்டுமாய் நாடக நூட்கள் இபற்றப்பட்டன—அவை "நாடகக் காப்பியங்"களென குறிப்பிடப்பட்டன-சிலப்பதிகாரத்தில் அரங்கேற்றுக் காதையினை நோக்கின் அக்காலத்தில் நாடக மேடைகள் எல்லாம் எப்படி அமைக்கப்பட்டன என்பன போன்ற அரிய செய்திகள் வெளியாகின்ற இயலினைப் புலவரும்—இசையினைப் பாணரும், கூத்தினைப் பொருநர்—விறலியர்—கூத்தர்—ஆகியோரும் வளர்த்தனர்—இவர்கள் அனைவரும் மக்களாலும் மன்னராலும் நன்கு மதிக்கப் பெற்று பரிசில் வழங்கப் பெற்றனர்—இக்கலைஞர்களும் தமக்குத் தோன்றிய நீதிகளையும்—கற்பனைகளையும் அரசர்க்கும் அஞ்சாது கலைகளின் மூலம் வெளிப்படுத்தினர்—...இப்படி பழங் காலந்தொட்டே நம் நாட்டில் நாடகம் வாழ்ந்து வருகிறது—உலகில் ஒவ்வொரு நாட்டிலும் வாழ்கிறது...

நாடகம் தனிச் சிறப்பினை என்றும் பெற்றுள்ளது—ஏனெனில் மற்றொருவனின் மனநிலையினைப் புரிந்து அவன் உள்ளத் தன்மையை வெளிப்படுத்தும் ஆற்றலைத் தருவது—அதாவது அடுத்தவனின் இன்ப துன்ப நிலைகளையும் எளிதிலே உணர வைப்பது—காண்போரின் உணர்வைத் தூண்டவல்லது—எனவே உள்ளத்திற்கு உவகை ஊட்டும் கலை மட்டுமல்ல நாடகம்—மற்றவர் உள்ளங்களைக் கட்டுப்படுத்தும் சக்தியும் வாய்ந்தது—இதன் துணைக்கொண்டு தூங்கும் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்ப முடியும்—உண்மைகளை உணர்த்த முடியும்—நல்லதை நவில முடியும்—கருத்துக்களை விதைக்க முடியும்!—

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பொடு கருத்தையும் அருளும் பொருள் நாடகம்! கடந்ததை, நடந்ததை, கற்பனை வளத்தை, தீர்க்க தரிசனத்தை கண் முன்னே காட்டுவது நாடகம்! வரலாற்றின் பொன்னோடுகளைப் படித்துக் காட்டுவது நாடகம்! தியாகிகளின் தியாகத் தன்மைகளை திரும்ப நினைவூட்டுவது நாடகம்—இப்படியெல்லாம் சொல்லிக் கொண்டே போகலாம்—சொல்லிமாளாது அதன் நலன்களை!......

இப்படிப்பட்ட ஓர் உயர்ந்த கலை, நாட்டுக்கு நல்ல பலன்களை நல்க முடியும்—எனவே இக்கலையின் நன்கு பேணுதல் நாட்டு மக்களின் கடமை! இன்றைக்கும் நாடகங்கள் ஏராளமாக நடக்கின்றன! "நாடகம்" என்ற பெயரிலே—

நாடகக் கலையின் புனிதத் தன்மை மாறுபட்டுவிட்டதென்றே சொல்லலாம்! பொதுவாக கலைக்கு விலை பேசுவதே கூடாது!...பரிசிலுக்கும் அளவிட்டுக் கூறலாகாது!...கலைத் திறனை அவையிலே அரங்கேற்றி அரும் பெரும் பரிசுகள் பெறும் நிலை மாறி—கலையினை கடைத் தெருவிலே வைத்து வியாபாரம் பேசும் காலமாக மாறிக் கொண்டே போகிறது—இந்த நிலையை பேசும் படங்கள் இன்னும் மோசமாக்கிக் கொண்டே வருகிறது...

நல்ல வேளையாக இப்பொழுது நாடகக் கலையிலே ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது—அதை நன்முறையில் பயன் படுத்திக் கொள்வது நம் கடமை! பொதுவாக ஒரு நாட்டுக் கலை அந்த நாட்டின் பண்பாடுகளையும் கோட்பாடுகளையும் பொருத்தே அமையும்—ஆனல் நம் நாட்டிலே நடக்கும் தற்கால நாடகங்களைப் பார்த்தால் நமக்கே பயமாக இருக்கிறது! கால் சட்டை போடாத கதாநாயகன்—துப்பாக்கிப் பிடிக்காத துஷ்டன்—ஆங்கிலம் இல்லாத அவர்களின் பேச்சு—இல்லவே இல்லை—நிகழும் நிகழ்ச்சிகளும்—நம் நாட்டினதாகவே இருக்காது—இப்படி நம் நாட்டுக் கலையெல்லாம் சின்னளில் வேறு நாட்டுக் கலைகளின் பதிப்புகளாகத்தான் மாறிவிடும். நாடகக் கலை மட்டும் அல்ல. இசை—நாட்டியம்—இவைகளின் நிலைகளும் கவலைக்கிடமாகத்தான் இருக்கின்றன. இதே போன்றுதான் சரித்திர நாடகங்களும், சமய நாடகங்களும் உருக்குலைக்கப்படுகின்றன—இந்நிலை மாற—நந்நிலை நிலைக்க—கலைஞரும்—மக்களும் பெரிதும் தம் பொறுப்பை உணர வேண்டும்! இப்பொழுது நாடகங்கள் யாரால் நடிக்கப் பெறுகின்றன—இன்றைய நாடகக் கலைஞர்களை இரண்டு விதமாகப் பிரிக்கலாம்—அவர்கள் தொழில் முறையோர்—பயில் முறையோர் என்பவராவர்...

தொழில் முறைக் கலைஞர்கள் கலைத் தொண்டோடு தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான ஊதியத்தையும் ஈட்டுதல் வேண்டும்.

எனவே அவர்கள் கலைக்காகவும்—கலை நுட்பங்களுக்காகவும் முழு நேரத்தையும் செலவழித்தல் முடியாத காரியம்! மக்களின் மனப்போக்குக்கு ஏற்றமான நாடகங்கள் நடிக்கப்பட்டாலன்றி அவர்கள் ஊதியத்தினை பெற முடியாது! மேலும் உயர்ந்த கலை நுட்பம் வயிற்றுக்கு சோறு போடும் என்று சொல்ல முடியாது—ஒரு கதையுண்டு...சிற்பக் கலைஞர் ஒருவர் விசித்திர நுட்பங்கள் அமைந்த அருமையான சிற்பங்களை விற்பனைக்கு வைத்திருந்தாராம்—ஆனலும் அவரை அணுகுவார்யில்லை... நாட்கள் ஓடின—வறுமை அவரை வாட்டியது. சோம்பியிருந்தார். தன் கடையில்—அவ்வழியே வந்த மதிநுட்பம் வாய்ந்த அந்நாட்டு அரசர் அவனைக் கண்டார்—காரணம் கேட்டார்—உண்மை உணர்ந்தார்—ஒரு உபாயம் சொன்னர். அந்த சிற்பங்களைவிட மூன்று மடங்கு பெரியதாயும்—நுணுக்கங்கள் குறைவாகவும் உள்ள சிற்பங்களைத் தயாரிக்கச் சொன்னர்—விலையும் இரட்டிப்பாக்கச் சொன்னர்—அக்கலைஞரும் அவ்வாறே செய்தார்—அதன் பலனக அக்கலைஞரின் வயிறு வளர்ந்தது—அவர் வளர்த்து வந்த கலை தேய்ந்தது... இந்நிலை பெரும்பாலான உண்மைக் கலைஞர்க்கு நேரிட்டால் உண்மைக் கலையே உலகத்தில் இருக்காது—எனவே கலைக் காக்கும் கடமை காவலருடையதும் கற்ருேருடையதுமாகும்—கலைஞரை அரசாங்கம் ஆதரித்தல் வேண்டும்—அத்தகைய கலைஞரை போற்றக் கலையரங்கங்கள் தேவை!

இதே போலத்தான் பயில் முறை நாடகக்காரரும்—அவர்கள் கலை பயில்வதோடு—நல்ல கருத்துக்களை பரப்பவும் முடியும்—பயில் முறையில் உள்ளவர்கள் அதனல் பிழைக்காவிட்டாலும்...கலைக்காக ஈட்டும் பொருள் அனைத்தும் செலவழிக்கவும் முடியாது—இவர்களில் நல்ல குழுவினர்க்கு ஆதரவு அளித்திடின், நாட்டிற்கும் கலைக்கும் இவர்கள் நற்தொண்டு செய்ய இயலும்......இத்தகையான ஊக்குவிப்பதற்கும் கலைக்கழகங்கள் தேவை!...

இப்படி தொழில் முறை—பயில் முறை குழுவினரால் நடிக்கப்படும் நல்ல நாடகங்களுக்கு ஆதரவு அளிக்கும் கலைக் கழகங்கள் நாட்டிலே தோன்றிடின்—நல்ல தொண்டினை நாடகம் ஆற்ற முடியும்...மொழிக்கும்—கலைக்கும்—நாட்டு மக்களுக்கும் நற்தொண்டாற்றும் நாடகங்களை ஆதரிக்கும் கலைக் கழகமாக புரசைக் கலைக் கழகம் திகழும் என்பதில்லை ஐயமில்லை!...

இப்படி ஒவ்வொரு கழகமும் தொண்டாற்றத் தலைப்படின் இயல் இயங்க—இசை முழங்க—கூத்துக் குலுங்க தமிழ்க் கன்னி பொலிவுறுவாள்......

மறக்க முடியாத நாட்கள்

லீலா ராமன், B.A., Hons. (Litt.)

வார்ஸா நகரில் நடைபெற்ற உலக வாலிபர் விழாவில் கலந்து கொள்ளும் பெருமை எனக்குக் கிடைத்ததை, நான் எனது பாக்கியமென்றே கருதுகிறேன். என் வாழ் நாள் முழுவதும் மறக்க முடியாத அனுபவங்களை நான் போலந்திலும், பின்பு சோவியத் யூனியனிலும்,சீனுவிலும் பெற்றேன். இந்திய மக்களிடமும் இந்தியக் கலையிடமும், இம்மக்கள் காட்டிய அளவிலா ஆர்வத்தை, நான் சென்ற வருஷம் லண்டனிலும், ஆக்ஸ்பர்டிலும், ஜர்மனியிலும், பாரிஸிலும் கண்ட ஆர்வத்திற்கு ஒப்பிடவே முடியாது. லண்டனிலும் மற்ற இடங்களிலும் நான் பரதநாட்டியம் ஆடிய போது அம்மக்கள் மிகவும் ரஸித்தனர் என்பது உண்மையே. ஜர்மனியில் நான் இரண்டுமணி நேரம் ஆடிய போதுகூட, கூட்டத்தில் ஒருவராவது சளைத்து எழுந்து போகாமல் கடைசிவரையிலிருந்து கரகோஷம் செய்தனர். ஆனால் இம்முறை வார்ஸாவிலும் மற்ற இடங்களிலும் நான் கண்ட வரவேற்பு ஒரு கண்கொள்ளா காட்சியாக இருந்தது. இவ்விழாவிற்கு நூற்றுப்பதினுன்கு நாடுகளிலிருந்து முப்பதாயிரம் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள் ! இந்தியர்கள் நாங்கள் சுமார் முந்நூறு பேர்சென்றிருந்தோம். இதில் எழுத்தாளர்கள், இசைவாணர்கள், நாட்டிய மாடுபவர்,வாத்திய இசை வித்துவான்களாக பலபேர் இருந்தோம். இக்கூட்டத்தில் தென்னிந்தியாவிலிருந்து பரத நாட்டியம் ஆடச் சென்றவர் நான் ஒருத்தியே. வார்ஸாவில் கலை விழா பதினுன்கு நாட்கள் நடைபெற்றன. விழா ஆரம்பநாள் இந் நூற்றுப் பதினுன்கு நாட்டுப் பிரதிநிதிகளாகிய முப்பதாயிர மக்களும் வாத்தியம் முழங்க ஆயிரக்கணக்கான மக்கள் ஆரவாரிக்க, ஸ்டேடியத்திற்கு வார்ஸா நகர் பாதைகளில் ஐந்து மைல் நடந்து சென்று ஒன்று கூடினேம். போலந்து தேசத்து மக்கள் வழி முழுதும் வரவேற்பு கரகோஷமானது காதையடைத்துச் சென்றது. கண்ணெட்டும் தூரம் ஒரே மக்கள் கூட்டம். ஊசி விழ இடமில்லை. வழியெல்லாம் பலவர்ண அலங்கரிப்பு. நாலாபுரமும் "வாழ்க உலக சமாதானம் !" என்ற கரகோஷம். ஸ்டேடியத்திலோ இன்னும் பெரிய வரவேற்பு. நாற்பத்திஞன்கு நாடுகளையும் குறிக்க நாற்பத்திஞன்கு பலூன்கள் பறக்கவிடப்பட்டன. அவை ஆகாயத்தில் வெடித்து ஒவ்வொன்றிலிருந்து ஒவ்வொரு நாட்டுக் கொடியும் ஒய்யாரமாக கீழே இறங்கியது ஒரு கண்கொள்ளா காட்சியாக இருந்தது. விமானங்கள் ஆகாயத்தை வட்டமிட்டன. சமாதானக் குறியாக புருக்கள் பறக்கவிடப்பட்டன. எல்லா தேசத்து மக்களும், அன்றும் மற்ற பதினுன்கு தினங்களும் ஒருவரோடொருவர் கலந்து கொண்டு அவரவர் கலையைப் பேசி பல விஷயங்களை அறிந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது. எல்லா தேசங்களைவிட அதிக வரவேற்பு அங்கு கிடைத்தது இந்திய மக்களுக்கே. இந்தியாவின் சமாதானக் கொள்கையையும், இந்தியக்கலை, கலாசாரங்களையும், போலந்து, ரஷ்யா, சீனு தேசத்து மக்கள் மிக மிகவும் மெச்சுகின்றனர். ஆகவே இந்தியர்களுக்கும், இந்தியக் கலைக்கும் இவர்கள் காட்டிய மரியாதை சொல்லிமுடியாது. வார்ஸாவின் பதினுன்கு தின கலை விழாவில் எல்லா தேசத்து கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. நான் இந்திய நேஷனல் ப்ரோகிராம் (Indian National Programme) நடைபெற்ற தினமும் மற்ற மூன்று தினங்களும் பரத நாட்டியம் ஆடினேன். எல்லா நிகழ்ச்சிகளைவிட இந்தியக் கலை நிகழ்ச்சிகளே மிக மிகவும் ரஸிக்கப்பட்டன.

இந் நிகழ்ச்சிகளின் போது மற்ற நிகழ்ச்சிகளைவிட கூட்டம் பன்மடங்கு அதிகமாக இருக்கும். இம்மக்கள் எங்களுக்குக் காட்டிய மரியாதையும், உற்சாகமும்தான் எத்தகையது! இவ்விதமான மரியாதை நிச்சயமாக நம் நாட்டிலோ, வேறு அயல் நாடுகளிலோ காணமுடியாது. இந்தியக் கலையில் அதுவும் இந்திய நாட்டியமென்ருலே இவர்களிடம் ஒரு தனி மதிப்பு. நான் ஒவ்வொரு தடவையும் மேடையில் ஆடிய பின்பு அதைக் காணவந்திருந்த போலந்து மக்களில், முன்பின் தெரியாதவர்கள் எத்தனையோ பேர் என்னிடம் வந்து தாமே அறிமுகப்படுத்திக் கொண்டு இறுதியில் என்னிடம் ஆயுள் முழுவதும் பழகிய நண்பர்கள் போலாகிவிட்டார்கள். இவர்கள் வீட்டிற்கெல்லாம் நான் சென்று அவர்களோடு உணவருந்தி மணிக்கணக்காக அவர்கள் நம் கலை

யைப் பற்றிக் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதிலளித்திருக்கிறேன். இவர்களின் அன்பின் ஞாபகார்த்தமாக இருக்க எத்தனையோ பரிசுகள் எனக்கு அளித்தனர். ஒவ்வொருவரும் நான் வார்ஸா விட்டு செல்லுகையில் ஒரு உயிர் தோழியைப் பிரிவது போல் என்னைத் தழுவிக்கொண்டு கண்ணீர் சொரிந்தனர். இதைவிட உண்மை அன்பிற்கு வேறு அத்தாட்சி என்ன வேண்டும் ? இதுமட்டுமல்ல. நான் வார்ஸாவிலிருந்த அத்தனை நாட்களும் ஒவ்வொரு நிமிஷமும் இவர்களின் அன்பிற்குப் பாத்திரமாயிருந்தேன். டிராமில் ஏறினுலும் சரி, பஸ்ஸிலிருந்தாலும் சரி, ரோடில் நடந்தாலும் சரி, எங்கிருந்தோ நாலாபுறமும் இம்மக்கள் வந்து சூழ்ந்து கொள்வர். என் புடைவையைப் பற்றியும் நெற்றியிலிருக்கும் குங்குமத்தைப் பற்றியும் அவர்கள் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்லி முடியாது. நாலாபுறமும் ஆடோகிராப் (Autograph) புஸ்தகங்கள் நீட்டப்படும். ஏன் ? ஒரு டிராம் கண்டக்டர் நான் இறங்கும் சமயம் பார்த்து, என் ஆடோகிராபை வாங்க டிராமையே நிறுத்திவிட்டார் ! பின்பு காமராக்களை வைத்துக்கொண்டு என்னை அங்கங்கே நிறுத்தி எடுத்தவர்கள் எத்தனை பேர்! இவ்வித மான வரவேற்பு எனக்கு மட்டுமல்ல என்னுடனிருந்த அத்தனை இந்தியருக்கும் கிடைத்தது. நம் ஊரில் நம் சினிமா நட்சத்திரங்கள்கூட இதில் கால்பாகம் அனுபவித்திருக்கமாட்டார்கள். என்னை ஆங்காங்கு சூழ்ந்துகொண்டு நான் யார், என் பெயரென்ன, கல்யாணமாகி விட்டதா என்ற கேள்விகளை அடுக்கிக் கொண்டே போவார்கள். நான் நாட்டியம் ஆடுகிறேன் என்று தெரிந்த க்ஷணமே எல்லோரும் அளவிலா சந்தோஷத்தோடு கை கொட்டி ஆரவாரிப்பார்கள். உடனே என்னை " சில அடவுகளை இங்கேயே ஆடி காண்பிக்க மாட்டாயா?" என்று கை ஜாடையால் காட்டிக் கெஞ்சுவார்கள். இவர்களின் பரிசுத்த மனதையும், அன்பையும் நான் எவ்வாறு உதறி விட முடியும். அங்கு நடக்கும் பாதையாக இருந்தாலும் சரி அங்கேயே ஒரு பதமோ, அல்லது சில அடவுகளோ ஆடுவேன். அவர்கள் ஒரே கரகோஷம் செய்து தம் நன்றியை தெரிவித்துக்கொள்வார்கள். பரத நாட்டியத்தின் நுட்பத்தை அறியாவிட்டாலும், இந்திய நாட்டியம் என்ற காரணத்தால் அது அவர்களை பரவசப்படுத்தியது. பரத நாட்டியத்தின் உண்மை அருமையை தெரியாதவர்களும் இங்கு இல்லாமலில்லை. சில எழுத்தாளர்கள், மற்றும் சில படித்தவர்கள் என்னிடம் வந்து, நம் தென்னிந்திய கோவில்களைப்பற்றியும், நம் புராணங்கள் பற்றியும், பரத நாட்டியத்திலுள்ள முத்திரைகள், அடபு ஜாதிகள் இவைகளைப்பற்றியும் எவ்வளவோ கேள்விகளைக் கேட்டனர். நான் அவர்களுக்கு ஒன்றுமே சொல்லாமலேயே அவர்களாகவே நான் மேடையில் ஆடிய பின்பு என்னிடம் வந்து "இது உங்கள் இந்திய நாட்டின் சாதாரணக் கலையல்ல. இக்கலையின் உண்மை பெருமை கண் பார்வையில் மட்டுமல்ல, உன் வாயாலும் சொல்லக்கேட்டு அறிந்து கொள்ள அவா கொண்டுள்ளோம்" என்று கூறினர். ஒரு தடவை நான் மேடையில் ஆடிய பின்பு ஒரு வயதானவர் என்னிடம் வந்து மிக உணர்ச்சியோடு என் கையைப்பற்றி தான் அன்று கண்ட காட்சியை என்றும் மறக்க முடியாதென்றும், தனக்கும் பரத நாட்டியத்தைப்பற்றி சில விஷயங்கள் முன்பே தெரியுமென்றும் கூறி மிகவும் ரஸமாக என்னிடம் சிறிது நேரம் பேசிவிட்டு என்னைவிட்டு போக மனமேயில்லாமல், பின்பு சென்றார். அவர் சென்ற பின்பு அவர் யாரென்று விசாரித்த போது, அவர்தான் போலந்து தேசத்து நாட்டியத்திற்கே தலை சிறந்த குருவென்று அறிந்தேன். எனக்குண்டான அதிர்ச்சி சொல்லவே முடியாது. ஏதோ சிறிதளவு நாட்டியம் தெரிந்த என்னிடம் இவ்வளவு உயர்ந்த குருவாகிய இப்பெரியவர் எத்தனை தாழ்மையோடு பேசிப் பழகினர். உண்மை கலைஞர் இவரல்லவா ! மறு நாள் நான் அவரைத் தேடி ஓடோடியும் சென்று அவர் ஆடோகிராபை (Autograph) வேண்டினேன். நான் அவரைத் தெரிந்து கொண்டேனென்று அறிந்து புன் முறுவலோடு தன் கையெழுத்தைக் கொடுத்தார். அது மட்டுமல்ல என்னையும் என் நாட்டியத்தையும் தான் என்றும் மறக்க மாட்டேனென்றும் உறுதியாகக் கூறினர். அன்றே நான் விலையில்லா புதையலை கண்டெடுத்தது போன்ற ஒரு ஆனந்த உணர்ச்சியோடு திரும்பினேன். இம்மக்களின் இதயத்தில் நம் இந்தியரிடம், உண்மையான அன்பும் மதிப்பும் நிறைந்திருந்தது. இதை நம்மிடம் காட்ட அவர்கள் சிறிதும் தயங்கவில்லை.

இதே வரவேற்புதான் ரஷ்யாவிலும், சீனுவிலும் கண்டேன். மாஸ்கோவில் ஒரு நாள் ஒரு விசேஷமான சம்பவம் நடந்தது. ஒரு மாலை எங்களையெல்லாம் ஒரு — ஓபன் ஏர் தியேட்டரில் (Open Air Theatre) நடக்கப்போகும் நிகழ்ச்சிக்கு அழைத்துச் சென்றனர்.

அன்று நடந்த நிகழ்ச்சிகளில் ஒரு "பரத நாட்டிய" நிகழ்ச்சியும் இருந்தது! ரஷ்ய பெண்கள் சோளியும், புடவையும் அணிந்து, நெற்றியில் பொட்டிட்டு, கூந்தலைப் பின்னி பூவைத்து மேடையில் வந்து இந்தியரைப் போல் பூமி தொட்டு நமஸ்கரித்து பரத நாட்டிய பாணியில் மிகவும் அழகாக ஆடினார்கள். நாங்கள் அதை ஆனந்தத்தோடு ரசித்தோம். நிகழ்ச்சி முடியும் வேளையில் என் ரஷ்ய நண்பர்கள் என்னை அவர்களுக்கு அறிமுகப்படுத்தினர். என்னை ஆடும்படி அவர்கள் கேட்டதால் நான் மேடையின் பின்னால் அவர்களை அழைத்துச் சென்று "அலாரிப்பு" ஆடிக்காட்டினேன். உடனே அவர்கள் "இம்மாதிரியான இந்திய நாட்டியம் தான் நாங்கள் ஆட விரும்புகிறோம். இன்று நாங்கள் ஆடியது இதை போலில்லாவிட்டாலும் இந்திய நாட்டியமாட எங்களுக்கிருக்கும் அவாவை நீங்கள் தெரிந்து கொண்டிருப்பீர்கள். தயவுசெய்து மீண்டும் வந்து எங்களுக்கு அவசியம் ஏதாவது சொல்லித் தரவேண்டும்" என்று கேட்டுக் கொண்டனர். ஆனால் எனக்கோ அவர்களை மீண்டும் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அன்று அவர்கள் ஒவ்வொருவரும் என்னைக் கட்டிக்கொண்டது நான் என்றும் மறக்கமுடியாது. மாஸ்கோவிலும் ஒரு நாள் நாங்கள் ஒரு நிகழ்ச்சி நடத்தினோம். அன்று ஒரு ரஷ்ய பெண் எனக்கு மிக நெருங்கிய சிநேகிதியானாள். அன்றிலிருந்து மாஸ்கோ விட்டு செல்லும் நாள்வரை காலையிலிருந்து இரவுவரை நான் எங்கு சென்றாலும் என் கூடவே வருவாள். எனக்கு ஒழியும் நேரம் என்னறைக்கு வந்து சில அடவுகள் கற்றுக் கொண்டாள். மாஸ்கோவிலிருந்து நான் புறப்படும் தினம் தன் சகோதிரியை விட்டுப் பிரிவது போல் தேம்பித் தேம்பியழுதாள். நான் இந்தியா சென்றதும் நாட்டியத்தைச் சுலபமாகக் கற்றுக் கொள்ளும் முறையில் பொம்மைகள் வரைந்த புஸ்தகங்களை கட்டாயமாக அனுப்புவதாகக் கூறினேன். மாஸ்கோவிலிருந்து பீகிங் செல்லும் ரயில் புறப்பட்டும் கூட வண்டி நகரும் வரை என் கையைப் பிடித்துக்கொண்டு பிளாட்பாரத்தில் கண்ணீர் தோய்ந்த முகத்துடன் நின்றாள். இவ்வாறான அன்பின் உருவம் மறைய மறைய ரஷ்யா விட்டு சீனா நோக்கிச் சென்றேன்.

சீனாவில் முக்கியமான சம்பவம், நானும் இன்னும் இரண்டு இந்தியர்களும் பீகிங் ஆபரா அவுஸ் (Peking Opera House) விஜயம் செய்தது. சீனாவின் கலை வளர்ச்சிக்கு எல்லாவித சாதனங்களும் இங்கிருந்தன. ஒருபுறம் நாட்டியம், ஒருபுறம் சங்கீதம், இன்னொரு புறம் வாத்திய பயிற்சி ஆக எல்லாவித கலை பயிற்சியும் நடந்துக்கொண்டிருந்தன. எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்து முடிந்ததும் எங்களுக்காக அவர்கள் தயார் செய்திருந்த ஒரு நிகழ்ச்சியை ரஸித்தோம். நானும் அன்று பரத நாட்டியம் ஆடினேன். ஆடியது மட்டுமல்லாமல் அதோடு அவர்களுக்கு விளங்குமாறு, ஆடியதின் அர்த்தத்தை யெடுத்துச் சொன்னேன். ஒரு மணி நேரத்தில் திரும்பிவிடுவதென்று நினைத்துச் சென்ற நாங்கள் அவ்விடத்திலிருந்து மூன்று மணி நேரம் நகர முடியவில்லை. இறுதியில் அங்கிருந்து செல்லுகையில் ஆபராவிலிருந்து ஒருவரையொருவர் நண்பர்களென்ற முறையிலே பிரிந்தோம். இறுதியில் இந்தியா திரும்புகையில் ஏராளமான புதிய நண்பர்கள், புதிய உணர்ச்சிகள், புதிய அனுபவங்கள் கொண்டு திரும்பினோம். வார்ஸா விழாவிற்குச் சென்ற ஒவ்வொரு இந்தியருக்கும், பரிசுத்தமான மனதும், உண்மையான ரஸிப்பும், நன் மதிப்பும், அறிந்து கொள்ளும் சக்தியும் இருந்தால், இவ்வருமையான நாட்களை எவ்வாறு மறக்க முடியும்?

KAMADENU STORES

(Dealers in High Class Oilman Stores)

No. 101, TANA STREET, PURASAWALKAM, MADRAS - 7

Specialits in **Pure Butter and Fresh Ghee**

Suppliers of **Nellore & Arcot Raw & Boiled Rice**

T. D. RAMANUJAM, *Proprietor.*

அழகுக்கு

அழகு செய்யும்

ஆபரணங்களின்



உறைவிடம்

M/s. T. கோவிந்தராஜுலு நாயுடு

வைரம், பொன் நகைகள்,

வெள்ளி சாமான்கள் வியாபாரம்.

28, நேதாஜி ரோட், மதராஸ்-1.

T. G. N.

தந்தி : "**ALANKAR**"

போன் : **4818**

P.V. SAMBAR
POWDER
FOR REAL FLAVOUR *and* DELICIOUS TASTE
P.VENCATACHELLUM CONDIMENTS
MADRAS-1.

பி.வி. சாம்பார் பொடி
உண்மையான மணத்திற்கும்,
ருசிக்கும்.
பி. வெங்கிடாசலம் காண்டிமெண்ட்ஸ்.,
நெ. 1. பிராட்வே-மதராஸ்.1.

USE P.V. SAMBAR POWDER
For Delicious Taste
P.VENCATACHELLUM CONDIMENTS
No.1 BROADWAY - MADRAS-1

P. V. SAMBAR POWDER
THE JOY OF WONDERFUL COOKING
P.VENCATACHELLUM CONDIMENTS. MADRAS - 1

EVEREADY PRINTERS
T. NAGAR : MADRAS-17